பழனிசாமியை பக்கத்தில் வைத்துக்கொண்டு பிரதமர் மோடி 'ஊழல் ஒழிப்பு' பற்றிப் பேசுவதா?

முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... 7 ஆம் பக்கத் தொடர்ச்சி

சமூக ஊடகங்களிலும், களத்திலும் முழுமையாகக் காட்ட வேண்டும்.

ஏனென்றால் நடைபெற இருக்கும் நாடாளுமன்றத் தேர்தல் என்பது மிக மிக மிக முக்கியமான தேர்தல். யார் ஆட்சிக்கு வரவேண்டும் என்பதைவிட, யார் இருக்கக் கூடாது என்பது தான் முக்கியம். புதுவை உள்ளிட்ட தமிழ்நாட்டின் 40 தொகுதிகளையும் நமது அணி கைப்பற்ற வேண்டும் என்பது மட்டுமல்ல இந்தியா முழுமைக்கும் நமது அணி வெற்றி பெற வேண்டும்.

ஏனென்றால், இந்தியாவின் கட்டமைப்பை பா.ஜ.க. சிதைத்துவிட்டது. இதற்கு எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் நாம் முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். இல்லாவிட்டால், தமிழ்நாட்டை மட்டுமல்ல, இந்தியாவையே யாராலும் காப்பாற்ற முடியாது. பா.ஜ.க. ஆட்சி தொடருமானால் இந்தியாவில் மக்களாட்சியை சமூகநீதியை இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை யாராலும் காப்பாற்ற முடியாது.

மீண்டும் பா.ஜ.க. ஆட்சி அமைக்குமானால் இந்தியாவில், ஜனநாயகமே இருக்காது. ஏன், தமிழ்நாடு என்ற மாநிலமோ அதற்கான சட்டமன்றமோ முதலமைச்சரோ அமைச்சர்களோ சட்டமன்ற உறுப்பினர்களோ இருக்க மாட்டார்கள். அத்தனையையும் காலி செய்து விடுவார்கள். உள்ளாட்சி அமைப்புகள் இருக்காது. இது தான் அனைத்து மாநிலங்களுக்கும் நடக்கும்.

புதிய நாடாளுமன்றம் கட்டியிருக்கிறார்களே எதற்கு? 888 இருக்கைகளைப் போட்டிருக்கிறார்கள். அது எதற்காக? நாடாளுமன்றத்தில் தங்களது விருப்பங்களுக்கு ஏற்ப இருக்கைகளைப் போட நினைக்கிறார்கள்.

மாநிலங்களின் பிரதிநிதித்துவம் குறைக்கப் பார்க்கிறார்கள் !

மக்கள் தொகைக் கணக்கெடுப்பு என்ற பேரால் மாநிலங்களின் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கப் பார்க்கிறார்கள். குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை முறையாகப் பின்பற்றிய தமிழ்நாடு, கேரளா போன்ற மாநிலங்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்படும். வடமாநிலங்களில் இதனால் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகம் ஆகும்.

நாம் 40 தொகுதிகளில் வெற்றி பெற்றுப் போனாலும் வட மாநில எம்.பி.களை வைத்து ஆட்சியைப் பிடித்துக் கொள்ளலாம் என்று தப்புக் கணக்குப் போடுகிறார்கள். தமிழ்நாட்டின் குரலை இதன் மூலமாகத் தடுக்கப் பார்க்கிறார்கள். எனவேதான் இந்தத் தேர்தலை மிக மிக முக்கியமான தேர்தலாக நான் சொல்கிறேன்.

மாநிலங்களுக்கு பல்வேறு தேசிய இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு பல்வேறு மொழிகளைப் பேசுபவர்களுக்கு பல்வேறு பண்பாட்டைச் சேர்ந்தவர்களுக்கு எதிரான சிந்தனை கொண்ட ஒரு கட்சிதான், பாரதீய ஜனதா கட்சி! ஒற்றைக் கட்சியே இருக்க வேண்டும் என்று நினைக்கும் கட்சி அது.

ஒற்றைக் கட்சி ஆட்சி அமைந்தால் ஒரே ஒரு ஆள் கையில் அதிகாரம் போய்விடும். இன்னும் சொல்கிறேன், அவ்வாறு அமைந்தால் அது பா.ஜ.க.வினருக்கே ஆபத்தான கொள்கை! அதனால்தான் பா.ஜ.க. இந்தத் தேர்தலில் வீழ்த்தப்பட வேண்டும் என்று சொல்கிறோம்.

இந்த முக்கியமான இலக்கை முன்னெடுக்கும் கட்சிகள் அனைவரும் இன்றைக்கு ஒன்று சேர்ந்திருக்கிறோம். 26 கட்சிகள் அடங்கிய இந்தக் கூட்டணிக்கு Indian National Developmental Inclusive Alliance என்று பெயர் சூட்டி இருக்கிறோம். INDIA என்பது இந்தக் கூட்டணிக்குப் பெயர். எனவே இந்தியாவைக் காப்பாற்றப் போவது இந்த INDIA கூட்டணிதான். இதனை பிரதமராக இருக்கும் மோடி அவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

> **திருச்சியை 'திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாடி வீடு' என்று பேரறிஞர் அண்ணாவும், 'கழகத்தின் கோட்டை' என்று நம்முடைய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களும் சொல்வார்கள். கழகத்தின் கோட்டை மட்டுமல்ல, கழகத்தின் தீரர்கள் கோட்டம்தான் இந்த திருச்சி.**

பா.ஜ.க.வை எதிர்க்க ஒரு வலுவான அணியை அமைத்துவிட்டார்களே என்று நினைத்து இப்போது ஏதேதோ பேசிக் கொண்டு இருக்கிறார். இந்த நோக்கத்தைப் பற்றி இப்போது அல்ல, நான் ஓராண்டு காலமாக சொல்லிக் கொண்டிருக்கிறேன். அதனால் என் மீதும் அவர்களுக்குக் கோபம். அதனால்தான் மத்தியப் பிரதேசத்துக்குப் போனாலும் தி.மு.க.வைத் திட்டுகிறார். அந்தமான் விமான நிலையத்தைத் திறந்து வைக்கப் போனாலும் தி.மு.க.வைத் திட்டுகிறார்.

ஆரியத்தை வீழ்த்த வந்த திராவிட வாரிசுகள் நாங்கள் !

என்ன சொல்கிறார், வாரிசுகளுக்கான கட்சியாம். இதைக் கேட்டுக் கேட்டு புளிச்சுப் போச்சு. வேறு ஏதாவது யோசித்து கண்டு பிடித்துச் சொல்லுங்கள்.

நான் இன்னும் சொல்கிறேன், இது வாரிசுகளுக்கான கட்சிதான். ஆமாம், வாரிசுகளுக்கான கட்சிதான். ஆரியத்தை வீழ்த்த வந்த திராவிடத்தின் வாரிசுகள் நாங்கள்! தந்தை பெரியாரின் வாரிசுகள்! பேரறிஞர் அண்ணாவின் வாரிசுகள்! தமிழினத் தலைவர் கலைஞரின் வாரிசுகள் நாங்கள்! இதனைத் தைரியமாக பெருமையோடு என்னால் சொல்ல முடியும்.

பா.ஜ.க. யாருடைய வாரிசு? நான் கேட்கிறேன். கோட்சேவின் வாரிசுகள்தான் நீங்கள் என்று உங்களால் தைரியமாகச் சொல்ல முடியுமா? சொல்வதற்கான தைரியம் உங்களுக்கு உண்டா?

குஜராத் மாநிலத்தில் 2002ஆம் ஆண்டு என்ன நடந்தது என்பதை இந்த நாடு மறக்கவில்லை. அன்று குஜராத்தில் நடந்ததை இன்று மணிப்பூர் நினைவூட்டிக் கொண்டு இருக்கிறது.

மே மாதம் தொடங்கிய வன்முறையை இன்றுவரை அந்த மாநிலத்தை ஆளும் மணிப்பூர் பா.ஜ.க. அரசாலும் தடுக்க முடியவில்லை. ஒன்றியத்தை ஆளும் பா.ஜ.க. அரசாலும் தடுக்க முடியவில்லை. வன்முறையாளர்களும், மாநிலத்தை ஆளும் மணிப்பூர் போலீஸும் கைகோத்துக் கொண்டு மக்களைத் தாக்குகிறார்கள் என்று நான் சொல்லவில்லை, பா.ஜ.க. வைச் சேர்ந்த மணிப்பூர் சட்டமன்ற உறுப்பினர் பாவோலியன்லால் ஹொக்கிப் சொல்லி இருக்கிறார். மீண்டும் சொல்கிறேன்... இப்படிச் சொல்லி இருப்பது ஸ்டாலின் அல்ல, பா.ஜ.க.வுக்கு எதிரணியில் இருப்பவர்கள் அல்ல. பா.ஜ.க.வைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் சொல்லி இருக்கிறார்.

> **நான் இன்னும் சொல்கிறேன், இது வாரிசுகளுக்கான கட்சிதான். ஆமாம், வாரிசுகளுக்கான கட்சிதான். ஆரியத்தை வீழ்த்த வந்த திராவிடத்தின் வாரிசுகள் நாங்கள்! தந்தை பெரியாரின் வாரிசுகள்! பேரறிஞர் அண்ணாவின் வாரிசுகள்! தமிழினத் தலைவர் கலைஞரின் வாரிசுகள் நாங்கள்! இதனைத் தைரியமாக பெருமையோடு என்னால் சொல்ல முடியும். பா.ஜ.க. யாருடைய வாரிசு? நான் கேட்கிறேன். கோட்சேவின் வாரிசுகள்தான் நீங்கள் என்று உங்களால் தைரியமாகச் சொல்ல முடியுமா? சொல்வதற்கான தைரியம் உங்களுக்கு உண்டா?**

ஒற்றுமையாக இருக்கும் மக்கள் மனதில் வேற்றுமையை விதைத்து மனக்கசப்பை உருவாக்கி வெறுப்பு அரசியல் மூலமாக அரசியல் ஆதாயம் தேட நினைத்ததன் விளைவுதான் இன்று மணிப்பூர் பற்றி எரிந்து கொண்டிருக்கிறது.

மணிப்பூராக மற்ற மாநிலங்களும் ஆகிவிடாமல் தடுத்தாக வேண்டும்!

இங்குள்ள கொத்தடிமைக் கூட்டம் மணிப்பூர் பற்றி யோசனை ஏன்?

இங்கே ஒரு கொத்தடிமைக் கூட்டம், யார் என்று தெரியும் அ.தி.மு.க. என்ற பெயரில் இயங்கிக் கொண்டிருக்கிறது. அவர்கள் யாராவது மணிப்பூரைப் பற்றிப் பேசினார்களா? வாய்க்கு வந்ததைப் பேசுவாரே பழனிசாமி. அவர் பேசினாரா? பேசவில்லையே. 'பா.ஜ.க.வுக்கு நான் அடிமையில்லை' என்று சொல்லும் பழனிசாமி, மணிப்பூர் கொடூரத்துக்குக் காரணமான அந்த மாநில முதல மைச்சரையோ ஒன்றிய பா.ஜ.க. அமைச்சரையோ கண்டித்தாரா?

பழனிசாமியை பக்கத்தில் வைத்துக் கொண்டு ஊழல் ஒழிப்பு பற்றி பிரதமர் மோடி பேசுகிறார். நான் அப்போதே கேட்டேன், "பக்கத்தில் யாரை வைத்துக் கொண்டு நீங்கள் பேசுகிறீர்கள்?" என்று கேட்டேன். சி.பி.ஐ. விசாரணைக்கு உயர்நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டு அதற்குத் தடை கேட்டு உச்சநீதிமன்றம் போனவர் பழனிசாமி. அவருடன் அமைச்சராக இருந்தவர்கள் மீதும் ஊழல் கறை படிந்திருக்கிறது. இந்த ஊழல் பேர்வழிகளை பக்கத்தில் வைத்துக் கொண்டு ஊழலைப் பற்றி பிரதமர் பேசுகிறார். பேசலாமா?

நான் இன்னும் கேட்கிறேன். கர்நாடக மாநிலத்தில் ஊழல் பா.ஜ.க. அரசை, ஊழலுக்காகத்தானே அந்த மாநில மக்கள் விரட்டி அடித்தார்கள், தோற்கடித்தார்கள். அது மறந்து போய்விட்டதா?

அ.தி.மு.க.வினர் மீதான ஊழல் வழக்குகளைக் காட்டி அவர்களை அடிபணிய வைத்துள்ளது பா.ஜ.க. கடந்த காலத்தில் தமிழ்நாட்டின் அனைத்து உரிமைகளையும் பா.ஜ.க.வுக்கு பயந்து அடமானம் வைத்தது அ.தி.மு.க.

எனவே உரிமைகளைக் கைவிட்டவர்களும் காவு வாங்கியவர்களும் இன்றைக்குக் கைகோத்து வருகிறார்கள். இவர்களை இந்தத் தேர்தலில் முழுமையாக நாம் வீழ்த்தியாக வேண்டும். இந்தியாவின் மற்ற மாநிலங்களும் மணிப்பூர் ஆகி விடாமல் தடுத்தாக வேண்டும்.

தமிழை - தமிழினத்தை - தமிழ்நாட்டு மக்களைக் காக்க வேண்டுமானால், இந்தியாவின் ஜனநாயகக் கட்டமைப்பைக் காப்பாற்றியாக வேண்டும். நமக்கு முன்னால் உள்ள கடமை என்பது மிக மிக மிகப் பெரியது. ஜனநாயகப் போர்க்களத்தில் முன்னணிப் படை வீரர்கள் நீங்கள். இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் போர்ப்படைத் தளபதிகள் நீங்கள். உங்களை நம்பி நாடாளுமன்றத் தேர்தல் களத்தை நான் ஒப்படைத்திருக்கிறேன். எனது கடமையின் தூதுவர்களாக ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் இருக்கப் போகிறவர்கள் நீங்கள், பணியாற்றப் போகிறவர்கள் நீங்கள். உங்களில் ஒருவனான நான் உங்களை நம்பி இந்தப் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறேன்.

களம் காணுங்கள்! கழகத்தின் வெற்றிக்காகக் களமாடுங்கள்!

நாற்பதும் நமதே! நாடும் நமதே!
இந்தியா வெல்லும்! அதை 2024 சொல்லும்!

இவ்வாறு கழகத் தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

மணிப்பூரைப் பற்றி பேசச் சொன்னால் கிழக்கிந்திய கம்பெனி பற்றி பேசுவதா?

பிரதமர் மோடிக்கு மல்லிகார்ஜுன கார்கே பதிலடி!

புதுதில்லி, ஜூலை 28-

மணிப்பூரைப் பற்றி பேசச் சொன்னால், கிழக்கிந்தியக் கம்பெனி பற்றி பேசுவதா? என்று பிரதமர் நரேந்திர மோடிக்கு, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தலைவர் மல்லிகார்ஜுன கேள்வி எழுப்பியுள்ளார்.

எதிர்க்கட்சிகள் அழைத்தும் நாடாளுமன்றத்திற்கு வரமறுக்கும் பிரதமர் மோடி, நாடாளுமன்றத்திற்கு வெளியே வீராப்புப் பேச்சில் ஈடுபட்டு வருகிறார். அந்த வகையில், செவ்வாயன்று பா.ஜ.க. எம்.பி.க்களின் வாராந்திர கூட்டத்தில் பிரதமர் மோடி கலந்து கொண்டு பேசினார். அப்போது, "இதுநாள் வரையில் நான் இதுபோன்ற திக்கற்ற எதிர்க்கட்சியினரைப் பார்த்தது இல்லை. 'இந்தியா' என்ற பெயருக்காக அவர்கள் தங்களையே புகழ்ந்து கொள்கிறார்கள். 'கிழக்கிந்திய கம்பெனி', 'இந்தியன் முஜாகிதீன்', 'பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா' போன்றவற்றிலும் கூடத்தான் 'இந்தியா' என்ற பெயர் இருக்கிறது. எனவே, 'இந்தியா' என்ற பெயரால் ஒன்றும் ஆகிவிடாது. நாட்டின் பெயரை மட்டும் வைத்துக் கொண்டு மக்களை தவறாக வழிநடத்த முடியாது. வரும் 2024 மக்களவைத் தேர்தலில் மக்களின் ஆதரவுடன் பா.ஜ.க. எளிதில் வெற்றி பெறும். அவர்கள் (இந்தியா கூட்டணியினர்), எதிர்க்கட்சி வரிசையிலேயே இருப்பார்கள்" என்று பிரதமர் மோடி தெரிவித்தார்.

அதாவது, 'இந்தியா' கூட்டணியை, பயங்கரவாத இயக்கங்களில் இருக்கும் 'இந்தியா' என்ற பெயரோடு ஒப்பிட்டு பிரதமர் மோடி, தனது வயிற்றெரிச்சலைக் கொட்டினார். இதற்கு அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, மாநிலங்களவையில் பதிலளித்தார்.

அப்போது, "மணிப்பூரில் கலவரம் நடக்கிறது, மாநிலமே பற்றி எரிகிறது. அதைப்பற்றி பிரதமர் மோடி பேச வேண்டும் என, நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் ஒத்தி வைப்பு தீர்மானம் கொண்டு வந்துள்ளனர். ஆனால், அவர் (மோடி) தற்போது கிழக்கிந்திய கம்பெனி பற்றி பேசுகிறார்" என பதிலடி கொடுத்தார். இதேபோல காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தியும் பிரதமர் மோடிக்கு ட்விட்டரில் பதிலளித்துள்ளார். அதில், "நீங்கள் எங்களை எப்படி வேண்டுமானாலும் அழைக்கலாம்.. மிஸ்டர் மோடி. ஆனால், நாங்கள்தான் இந்தியா. மணிப்பூரை மீட்டெடுக்க உதவுவோம்; அங்குள்ள பெண்கள் மற்றும் குழந்தைகளின் கண்ணீரை துடைப்போம்; மணிப்பூரில் அன்பு மற்றும் அமைதியை நாங்கள் மீண்டும் கொண்டு வருவோம். இந்தியாவின் அடிப்படை கொள்கைகளை மணிப்பூரில் மீண்டும் கட்டியெழுப்புவோம்" என்று கூறியுள்ளார்.

மின்சார வாகனங்களுக்கு வழங்கும் மானியத்தை ஒன்றிய அரசு நிறுத்தியது ஏன்?

மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் மக்களவையில் கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 28-

மின்சார வாகனங்களின் பயன்பாட்டை அதிகரிக்கும் வகையில் 'மின்சார வாகனங்களின் விரைவான உற்பத்தி மற்றும் அதன் பயன்பாட்டுக்கு விரைந்து மாறுதல்' (FAME) எனும் திட்டத்தின் மூலம் மின்சார வாகனங்களுக்கு மானியம் வழங்கப்பட்டு வந்தது. இதன் மூலம் மின்சார வாகனங்களின் பயன்பாடும் அதிகரித்து வந்த நிலையில் கடந்த 18 மாதங்களாக ஒன்றிய அரசு அந்த மானியத்தை நிறுத்தி வைத்துள்ளது ஏன் என்றும் இத்திட்டத்தின் செயல்பாட்டில் நடைமுறை நேர்மை மற்றும் வெளிப்படைத்தன்மையை ஒன்றிய அரசு உறுதி செய்யுமா என்றும் பல்வேறு கேள்விகளை ஒன்றிய கனரக தொழிற்துறை அமைச்சகத்திடம் நாடாளுமன்றத்தில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் கேள்வி எழுப்பினார்.

அதன் விவரங்கள் பின் வருமாறு :

இந்தியாவில் மின்சார வாகனங்களின் விரைவான உற்பத்தி மற்றும் அதன் பயன்பாட்டுக்கு விரைந்து மாறுதல் (FAME II) திட்டத்தின் இரண்டாம் பகுதி சீர்குலைக்கப்பட்டு வருவதாக மின்சார வாகன உற்பத்தியாளர்களின் சங்கம், நிதி ஆயோக் குழுவை அணுகியது உண்மையா என்றும் அவ்வாறெனில் அது குறித்த விவரங்கள் மற்றும் அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என கேள்வி எழுப்பினார்.

கடந்த 18 மாதங்களாக மின்சார வாகனங்களின் விரைவான உற்பத்தி மற்றும் அதன் பயன்பாட்டுக்கு விரைந்து மாறுதல் (FAME II) திட்டத்தின் இரண்டாம் பகுதிக்கான மானியத்தை நிறுத்துவதற்கான அரசாங்கத்தின் முடிவின் பின்னணியில் உள்ள காரணங்கள் என்ன என கேள்வி எழுப்பினார்.

இவ்வாறு மானியத்தை நிறுத்தி வைத்ததின் மூலம் தேசிய மின்சார இயக்கத் திட்டம் மற்றும் மின்சார வாகனங்களின் விரைவான உற்பத்தி மற்றும் அதன் பயன்பாட்டுக்கு விரைந்து மாறுதல் (FAME II) திட்டத்தில் ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதா என்றும் அவ்வாறெனில் அதன் விவரங்களைத் தெரியப்படுத்தவும் என கேள்வி எழுப்பினார்.

மின்சார வாகனங்களின் விரைவான உற்பத்தி மற்றும் அதன் பயன்பாட்டுக்கு விரைந்து மாறுதல் (FAME II) திட்டத்திற்கான இரண்டாம் பகுதியின் மானியத்தை வாகன உற்பத்தியாளர்கள் தவறாகப் பயன்படுத்தியதாக கூறப்படும் குற்றச்சாட்டு மீது ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன என கேள்வி எழுப்பினார்.

இந்த திட்டத்தின் செயல்பாட்டில் நடைமுறை நேர்மை மற்றும் வெளிப்படைத்தன்மையை ஒன்றிய அரசு உறுதி செய்யுமா என்றும் அவ்வாறெனில் அதன் விவரங்களைத் தெரியப்படுத்தவும் என கேள்வி எழுப்பினார்.

மின்சார வாகனங்களுக்கான மானியத்தை நிறுத்தி வைத்துள்ளதால் மக்கள் மின்சார வாகனங்களுக்கு விரைந்து மாறுதலில் உள்ள சிக்கல், அசல் உபகரண உற்பத்தியாளர்கள் (OEM) மற்றும் தொடக்க நிலை நிறுவனங்கள் சந்திக்கும் பிரச்சினைகள் குறித்து மின்சார வாகன உறுபத்தியாளர்களின் சங்கம் எழுப்பிய கவலைகளை நிவர்த்தி செய்ய ஒன்றிய அரசு முன்மொழிகிறதா என கேள்வி எழுப்பினார்.

விளையாட்டுத் துறைக்கு நிதி ஒதுக்கீட்டில் ஒன்றிய அரசு பாரபட்சம்!

குஜராத்துக்கு ரூ.587 கோடி - தமிழ்நாட்டுக்கு வெறும் ரூ.19 கோடி!

புதுடெல்லி, ஜூலை 28 -

கடந்த 4 ஆண்டுகளில் மாநில வாரியாக விளையாட்டுத்துறை கட்டமைப்புகளை மேம்படுத்த ஒன்றிய அரசு ரூ.1,800 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் உறுப்பினர் ஒருவரின் கேள்விக்கு ஒன்றிய விளையாட்டுத் துறை அமைச்சர் எழுத்துப் பூர்வமாக பதிலளித்தார்.

அதில்; கடந்த 4 ஆண்டுகளில் மாநில வாரியாக விளையாட்டுத்துறை கட்டமைப்புகளை மேம்படுத்த ஒன்றிய அரசு ரூ.1,800 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. குஜராத் மாநிலத்துக்கு ரூ.587 கோடி ஒதுக்கியுள்ள ஒன்றிய அரசு, தமிழ்நாட்டுக்கு ரூ.19 கோடி மட்டுமே ஒதுக்கீடு செய்துள்ளது.

குஜராத்தை விட தமிழ்நாட்டில் அதிக பயிற்சி மையங்கள் உள்ளபோது சொற்ப நிதியே ஒதுக்கப்பட்டுள்ளது. குஜராத்தில் 15 அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டு பயிற்சி மையங்களும் தமிழ்நாட்டில் 18 மையங்களும் உள்ளன. கேலோ இந்தியா திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டு பயிற்சி மையங்கள் குஜராத்தை விட தமிழ்நாட்டில் அதிகம் உள்ளது. குஜராத்துக்கு அடுத்தபடியாக உத்தரப் பிரதேசத்துக்கு ரூ.346 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. அதனை தொடர்ந்து கர்நாடகாவுக்கு ரூ.127.25 கோடியும், அருணாச்சல பிரதேசத்துக்கு ரூ.60.11 கோடியும், ராஜஸ்தானுக்கு ரூ.53.19 கோடியும், பீகாருக்கு ரூ.46.33 கோடியும், பஞ்சாப் மாநிலத்துக்கு ரூ.46.24 கோடியும், ஹரியானாவுக்கு ரூ.45.74 கோடியும், நாகாலாந்துக்கு ரூ.38.00 கோடியும், ஹிமாச்சல பிரதேசத்துக்கு ரூ.30.54 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் விளையாட்டுத்துறை மேம்பாட்டிற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்துள்ளது புள்ளி விவரங்கள் மூலம் அம்பலமாகியுள்ளது.

தேனி தொ.மு.ச. சார்பாக கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துபணி மனையில் ஓட்டுனர்கள் நடத்தினார்கள் மற்றும் பணியாளர்களுக்கு இலவச பொது மருத்துவ முகாமை தொ.மு.ச. திண்டுக்கல் மண்டல பொதுச் செயலாளர் பொன் செந்தில், கோட்ட மேலாளர் கிளை மேலாளர், கிளை செயலாளர் வீரமுத்து, செயலாளர் முருகன் ஆகியோர் கலந்து கொண்டு முகாமை துவக்கி வைத்தனர்.

தேனி தெற்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டரணி சார்பாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மகளிர் கருத்தரங்கம் உத்தமபாளையம் தனியார் மண்டபத்தில் நடைபெற்றது இந்த கருத்தரங்கில்தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார். மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ஜெப்ரின், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் சாரதா சென்ராயன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றினார்கள். உத்தமபாளையம் கிழக்கு ஒன்றிய செயலாளர் முருகேசன், பேரூர் செயலாளர் முகமது காசிம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தலைமைக் கழக பேச்சாளர்கள் புதுக்கோட்டை விஜயா, ஆரணி மாலா ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள், இந்த நிகழ்ச்சியில் மகாராஜன் எம்.எல்.ஏ. மாநில தீர்மான குழு இணை செயலாளர் ஜெயக்குமார், மாவட்ட துணை செயலாளர் குரு இளங்கோ மாநில நெசவாளர் அணி துணை அமைப்பாளர் ராமசாமி மற்றும் மாவட்ட மகளிர் அணி தலைவர் சாந்தி, துணை அமைப்பாளர்கள் சகாயராணி, சுந்தரி, தமயந்தி, லாவண்யா, வளர்மதி, இந்திரா, ஜெயா, ரம்யா, தவமணி, சரஸ்வதி, மணிமேகலை, சுப்புலட்சுமி, சுனேதா, ரேவதி கலைச்செல்வி ரேணுகா, வசந்தா மற்றும் ஒன்றியச் செயலாளர்கள், நகர செயலாளர்கள், பேரூர் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.